# செந்தமிழ்

தொகுதி : 95 திருவள்ளுவர் ஆண்டு 2032 சூன் 2001 பகுதி : 6

திங்கள் இதழ்

மதிப்புறு ஆசிரியர் **இரா. அழகுமலை** எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

## தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் திரு.நா. குமரன் சேதுபதி | தலைவர் |
| திரு. எம்.பி.ஆர். மலையாண்டி என்ற அசோக் | துணைத்தலைவர் |
| திரு. இரா. அழகுமலை | செயலாளர் |
| திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் | உறுப்பினர் |
| திரு. மா. சங்கர பாண்டியன் | உறுப்பினர் |
| திரு. டாக்டா. ந. சேதுராமன் | உறுப்பினர் |
| திரு. கே. கந்தசாமி | உறுப்பினர் |
| திரு. வெ. பழனிச்சாமித்தேவர் | உறுப்பினர் |
| திரு. வே. திருவரங்கராசன் | உறுப்பினர் |
| திரு. க.சி. அகமுடைநம்பி | உறுப்பினர் |
| திரு. ச. பரங்குன்றம் | உறுப்பினர் |
| திரு. அ. சாமிஐயா | உறுப்பினர் |

## செந்தமிழ் ஆசிரியர் குழு

பேரறிஞர். நா. பாலுசாமி
பேரறிஞர். தமிழண்ணல்
பேரறிஞர். செ. கந்தசாமி
டாக்டர். ந. சேதுராமன்
பேரறிஞர். ம.ரா.போ. குருசாமி
பேரறிஞர். கதிர். மகாதேவன்
பேரறிஞர். கு. துரைராசு
பேரறிஞர். அ.அ. மணவாளன்
பெரும் புலவர். இரா. இளங்குமரன்
பேரறிஞர். அ. தட்சிணாமூர்த்தி
பேரறிஞர். எஸ்.எம். கமால்
பேரறிஞர். ஈ.கி. இராமசாமி
பேரறிஞர். சே. அரிராமநாதன்
பேரறிஞர். அ.மா. பரிமணம்
திரு. வே. திருவரங்கராசன்

# செந்தமிழ்

திங்கள் இதழ்

| இதழ் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
| --- | --- | --- |
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 60 | ரூ. 600 |
| வாணாள் கட்டணம் | ரூ. 500 | ரூ. 2000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. 6 | |

மதிப்புறு ஆசிரியர் :

இரா. அழகுமலை எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

## பொருளடக்கம்

1) மருள் நீங்கிய மாசறு காட்சி
க.ச. அகமுடைநம்பி . . . . 187

2) சேக்கிழாரின் வரலாற்றுணர்வு
டாக்டர் அ.மா. பரிமணம் . . . . . 198

3) சிறுகதைக்கு ஒரு புதுமைப்பித்தன்
முனைவர் இரா. மோகன் . . . . . 215

4) 'இல்'லும் 'உள்'ளும் ஒரு குறிப்பு
பேராசிரியர் ந. சுப்பிரமணியன் . . . . 221

# மருள் நீங்கிய மாசறு காட்சி

- க.சி. அகமுடை நம்பி

நம்மில் பெரும்பாலோர் இயற்கையுடன் கூடிய தொடர்பை இழந்துவிட்டிருக்கிறோம். நகரிய நாகரிகமும் இதற்கு ஒரு காரணமாகும். நகரிய மக்கள் வாழுகின்ற அடுக்கக மாளிகைகளில் ஓர் அந்தி வானத்தையோ, காலைக் கதிரவனையோ பார்ப்பதற்குக்கூடப் போதிய இடைவெளி இருப்பதில்லை. பார்க்கும் இடமெல்லாம் பரந்துகிடக்கும் அழகுடன் உள்ள தொடர்பை, நாம் இழந்து வருகிறோம்.

இயற்கையின் தொடர்பை இழந்துவரும் நாம் அறிவாற்றலில் நம் ஆதிக்கத்தைப் பெருக்கிக்கொள்ள விரும்புகிறோம். அருங்காட்சியகங்களை அல்லது இசைக்கச்சேரிகளை நாடிச்செல்கிறோம். தொலைக்காட்சியைப் பார்த்தவாறு பொழுதைப் போக்குகிறோம்.

இயற்கையின் மீது நமக்கு நேரடித்தொடர்பு இருக்குமானால், சிறகடித்து வாழுகின்ற பறவைகளைக் கவனிப்போமானால், வானத்தின் அசைவுகளைக் கவனித்துப் பார்ப்போமானால், மலைச் சரிவுகளில் விழுகின்ற நிழல்களை உற்றுப்பார்ப்போமானால், ஓவியங்களைப் பார்ப்பதற்காகப் பொருட்காட்சிக்குச் செல்ல வேண்டுமென்று நமக்குத் தோன்றுமா? எதையும் நாம் உற்றுப்பார்ப்பதில்லை, உற்றுக் கேட்பதும் இல்லை.

உற்றுப் பார்ப்பது அல்லது கேட்பது எனும் செயல், கடினமான செயல்களில் ஒன்றாக ஆகியுள்ளது. உற்றுப் பார்த்தலும் கேட்டலும் ஒரே தன்மையானது. துயர் மிகுதியால் நம் கண்கள் திரையிடப்பட்டிருந்தால், மாலைக் கதிரவன் மறைகின்ற அழகை நம்மால் பார்க்க முடியாது. எதனையும்

உற்றுப் பார்ப்பதற்கு நமது மனம் மாசு மறுவற்று இருத்தல் வேண்டும். மாசற்ற மனத்தைக்கொண்டு, எற்தப்பொருளையும், உள்ளது உள்ளபடி காணுதல் இயலாது.

இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு (குறள் 352)

இக்குறளின் மெய்ப்பொருளை உய்த்து உணர்வதற்கு, 'மருள்' என்பது என்ன என்பதையும், 'மாசறு காட்சி' யாது என்பதையும், தெள்ளத்தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டியது இன்றியமையாதது. இவற்றைப் புரிந்து கொள்வதற்கு மொய்ப்பொருளறிஞர் ஜே. கிருஷ்ணமூர்த்தியின் கருத்தோட்டம் நமக்குத் துணைபுரிவதைக் காணலாம். அவர் கூறுகிறார்:

" நாம் ஒரு மரத்தையோ, ஒரு மலரையோ பார்ப்பதாகச் சொல்லும் போது, உண்மையாகவே அவற்றை நாம் பார்க்கிறோமா? இல்லை. மரம் அல்லது மலர் என்ற சொல் உருவாக்கியுள்ள உருவகத்தையே பார்க்கிறோம். ஒரு மரத்தை, அதனுடன் தொடர்புடைய மற்றப்பொருள்களின் சார்பு இல்லாமல், அதைப் பற்றி நாம் சேகரித்து வைத்துள்ள அறிவுத்தொகுதியுடன் என்றில்லாமல், விருப்பு வெறுப்பில்லாமல், அதைப் பற்றிய நமது கருத்து என்பது இல்லாமல், மரத்தை உற்றுப் பார்க்கும் செயல்பாட்டை நாம் இதுவரை ஆய்வு செய்து பார்த்ததில்லை.

" நமது முழுமையான இருத்தலுடன்(all our being) நமது மொத்த ஆற்றலுடன், நாம் அந்த மரத்தைக் கவனித்துப் பார்க்கும்போது, அந்தக் கவனச் செறிவில், கவனிப்பவர் என்றொருவர் இல்லை என்பதையும், அங்கிருப்பதெல்லாம் கவனம் மட்டுமே என்பதையும் கண்டுகொள்ளலாம். கவனக்குறைவிலேதான், கவனிப்பவர், கவனிக்கப்படும் பொருள் என்ற இருமைக்கு இடம் உண்டு. ஒரு பொருளை நமது முழுமையான கவனத்துடன் உற்றுப்

பார்க்கின்ற நிலையில், எந்தவொரு கருத்தியலுக்கோ அல்லது நினைவுக்கோ, அங்கு இடைவெளி இராது. இதனைப் புரிந்து கொள்வது மிகவும் முக்கியமானது.

"தான்" என்பதை முழுமையாக விலக்கிவிட்டு ஒரு மரத்தையோ, விண்மீன்களையோ, ஒளிர்ந்துமின்னிக் கொண்டுள்ள நீரலைகளையோ நோக்குகின்ற ஒரு மனம், அழகு என்பது யாது என்பதை அறியும். இவ்வாறு நாம் மெய்யாகப் பார்த்துக் கொண்டிருக்கும்போது, அன்புற்ற நிலையில் இருக்கிறோம்.

"பொதுவாக அழகை ஒப்பிடுதல் மூலமாகவும் அல்லது மானுட எண்ணங்களின் கலவையாகவும் அறிந்துகொள்ள முயல்கிறோம். அதாவது, ஒரு புறநிலைப் பொருள் மீது அழகைக் காரணப்படுத்துகிறோம். அழகை ஏற்றிப் பார்க்கிறோம். அழகான கட்டிடம் என்று கருதுகின்ற ஒன்றை நான் பார்ப்பதாகக் கொண்டால், என்னிடமுள்ள கட்டிடக்கலை அறிவின் காரணமாக, அந்தக் கட்டிடத்தை, நான் ஏற்கனவே பார்த்துள்ள மற்றொரு கட்டிடத்துடன் ஒப்பிட்டுப் பார்த்துப் பாராட்டுகிறேன். ஆக, இந்தக் கட்டிடத்தை மெய்யாகவே நான் பார்க்கத் தவறுகிறேன்."

"நீங்கள் தனித்தோ, இன்னொருவருடன் சேர்ந்தோ நடந்து செல்கிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். பேசுவதை நிறுத்திக் கொள்கிறீர்கள். இயற்கை உங்களைச் சூழ்ந்துள்ளது. நாய் எதுவும் குரைக்கவில்லை. சீறுந்தின் சிற்றொலி எதுவும் இல்லை. பறவை சிறகடிக்கும் சத்தம் கூட ஆங்கில்லை. சந்தடியற்ற முழு அமைதியில் நீங்கள், இயற்கையும் முழு அமைதியில். கவனிப்பவரும் கவனிக்கப்படும் பொருளும் அமைதியில் வீற்றிருக்கின்ற அந்த நிலையில், கவனிப்பவர் கவனிக்கப்படும் பொருளை எண்ணங்களாகப் பெயர்த்தல் செய்திடாத அந்த நிலையில், முற்றிலும் புதுமையான ஓர் அழகு குடிகொண்டுள்ளது.

அப்போது ‘இயற்கை -கவனிப்பவர்’ என்ற இருமை இல்லை. அப்போதுள்ள மனநிலை முழுமையாக, மொத்தமாகத் தனித்துள்ளது. அந்த அமைதியில் அழகு வீற்றிருக்கிறது”.

ஜே.கிருஷ்ணமூர்த்தி, இங்குக் குறிப்பிடுகின்ற அழகுதான், வள்ளுவர் குறிப்பிடும் ‘மாசறு காட்சி’ என்பதையும், அந்த அழகு விளக்கம் பெறுவதற்குத் தடையாக உள்ள ‘யான்’, ‘எனது’ என்ற மையமும் அந்த மையத்தைச் சுற்றியுள்ள வட்டமும்தான் அறியாமைக்குக் காரணமாகின்ற ‘மருள்’ என்பதையும் நாம் புரிந்து கொள்ளலாம். இந்த மருளே, இருள்சேர் இருவினைக்கும், மனத்துக்கண் படிகின்ற மாசுவிற்கும் காரணமாகின்றது. பொருளல்லவற்றைப் பொருளென்றுவரும் மருளே நம்முடைய அறியாமை பிறத்தலுக்கு அடிப்படைக் காரணமாம் என்பதையும், மருள் நீங்கிய அறிவுப் புலன், அல்லது நுண்மாண் நுழைப்புலம் கைவரப் பெற்றால், எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருளில் மெய்ப்பொருளைக் காணமுடியும் என்பதையும் புரிந்து கொள்கிறோம்.

### உறவுக்குத் தடையாகும் உருவகங்கள்

வாழ்வில் எந்த ஒன்றையும், அதைப் பற்றிய கருத்து அல்லது நம்பிக்கையை, உருவகத்தை மனதில் கொள்ளாமல் பார்க்கும்போது தான், அந்தப் பொருள் மீது நெருக்கமான உறவு கொள்ள முடியும். ஆனால், நம்முடைய எல்லா உறவுகளும் கருத்தாக்கமாகவே, எண்ணத்தின் உருவாக்கமான உருவகத்தைச் சார்ந்ததாகவே உள்ளன. நண்பர்கள் என்று சொல்லிக்கொள்பவர் இருவரில் ஒருவர் மற்றவரைப் பற்றிய உருவக்தையும், அவர் இவரைப் பற்றிய உருவகத்தையும் வைத்துக் கொண்டிருக்கும்போது, அவர்கள் ஒருவரையொருவர் எப்படி இருக்கிறார்களோ அப்படியே காண்பதில்லை. அவர்கள் காண்பதெல்லாம், ஒருவரைப்பற்றி ஒருவர் உருவாக்கிக்

கொண்டுள்ள உருவகத்தையே. இந்த உருவகங்கள் அவ்விருவருக்குமிடையே இருக்கவேண்டிய மெய்யான உறவுக்குத் தடையாக உள்ளன. 'அகம் நக நட்பது' இங்கு நடப்பதில்லை. இதனைக் கருத்தில் கொண்டுதான்,

இணையர் இவர்எமக்கு இன்னம்யாம் என்று
புனையினும் புல்லென்னும் நட்பு. (குறள் 790)

என்று கூறுகிறார் வள்ளுவர். 'இணையர் இவர்' என்பது ஓர் உருவகம். 'இன்னம் யாம்' என்பது இன்னோர் உருவகம். இந்த உருவகங்கள் உறவு கொள்வதால் அகநக நட்பு முகிழ்ப்பதில்லை.

மனித உறவுகள் குறித்து வள்ளுவரைப் போல் மிக ஆழமாகச் சிந்தித்தவர் ஜே.கிருஷ்ணமூர்த்தி. அவருடைய சொற்கள் நமக்குத் தெளிவை உண்டாக்கும். அவர் கூறுகிறார்:

"உங்களை நான் அறிவேன் என்று நான் சொல்லும்போது, நேற்று உங்களை நான் அறிந்தேன் என்பதுதான் பொருள். இப்போது நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியாது. நான் இப்போது அறிவது, உங்களைப் பற்றி நான் கொண்டுள்ள உருவகமே. நீங்கள் என்னைப் புகழ்ந்து, அல்லது இகழ்ந்து என்னென்ன சொல்லியிருக்கிறீர்கள்; நல்லதாக, அன்றி அல்லதாக எனக்கு நீங்கள் என்னவெல்லாம் செய்திருக்கிறீர்கள் என்பன போன்ற அனைத்தும் ஒருங்கிணைந்ததே உங்களைப் பற்றிய எனது உருவகம். அதே போன்றதுதான் என்னைப் பற்றி நீங்கள் கொண்டுள்ள உருவகம். இந்த இரண்டு உருவகங்கள்தாம், ஒன்றுக்கொன்று உறவு கொள்கின்றன. நாம் மெய்யாகவே உறவு கொள்வதற்கு இந்த உருவகங்கள் தடையாக நிற்கின்றன. நம்மிடையே உள்ள உண்மையான உறவைப் புரிந்து கொள்ளும்போதுதான், அன்பு முகிழ்க்கக்கூடும். நாம் உருவகங்களை வைத்துக் கொண்டிருக்கும் நிலை தொடர்வதால், அன்பு மறுக்கப்படுகிறது.

"நமக்கும் நாம் பார்க்கும் பொருளுக்குமிடையே இந்த உருவகங்கள் ஓர் இடைவெளியை(Space) உண்டாக்குகின்றன. இந்த இடை வெளியில் போராட்டம் உருவாகிறது. ஆகவே நாம் காணப்போவது, இந்த இடைவெளியிலிருந்து நாம் விடுபட முடியுமா? நமது புறத்தில் மட்டுமன்றி, நமக்குள்ளேயே இடைவெளியில்லாமல் இயங்கமுடியுமா என்பதுதான். இந்த இடைவெளியால் மக்களின் அனைத்து உறவுகளிலும் பிளவு ஏற்படுகிறது.

" வானத்தில் விண்மீன்களை நீங்கள் பார்க்கிறீர்கள். ஒளிர்கின்ற விண்மீன்கள் வெள்ளம்போல் வானத்தில் நிறைந்துள்ளன. குளிர்ந்த மென்காற்று வீசுகிறது. இவற்றுக் கிடையே நீங்கள், காண்பவராக, பட்டு அறிபவராக, எண்ணுபவராக, வலியால் துன்புறும் நெஞ்சுடன், 'நான்' என்ற மையத்தில் இடைவெளியை ஏற்படுத்திக் கொண்டுள்ளீர்கள். உங்களுக்கும் விண்மீன்களுக்கும் இடையிலுள்ள வெளியைப் பற்றி நீங்கள் அறிய மாட்டீர்கள்.

"அதே போல் உங்களுக்கும் உங்கள் மனைவி அல்லது கணவருக்கும் இடையிலுள்ள வெளியைப் பற்றி நீங்கள் ஒருபோதும் அறிய மாட்டீர்கள். ஏனெனில், உருவத்தை விடுத்து நீங்கள் ஒருபோதும் பார்ப்பதில்லை. ஆகவேதான், அழகு என்பது என்ன, அன்பு என்பது என்ன என்பதை நாம் அறிவதில்லை. அதைப்பற்றி நிறையப்பேசுகிறோம். எழுதுகிறோம். ஆனால் அதனை நாம் அறிவதில்லை. 'தான்' என்பதை முழுமையாகக் கைவிடுகின்ற சில அரிய தருணங்களில் மட்டும், அழகையும் அன்பையும் நாம் அறிந்து கொள்கிறோம்".

ஜே.கிருஷ்ணமூர்த்தி நமக்குக் காண்பிக்கின்ற இந்த அழகே, வள்ளுவர் சுட்டுகின்ற மாசறு காட்சி என்பதை

அறிந்தோம். மாசறு காட்சியில் நாம் பங்கு பெறும் வாழ்வியலைப் பெற்றோமானால், நம் வாழ்வு அன்பினால் அழகாக மிளிரும். உண்மையான அன்பு நம்மில் ஊற்றெடுக்கும். மானுட உறவுகள் அன்பெனும் நாணில் தொடுக்கப்பெறும். மலர்மிசை ஏகியவர் களாய் மனிதர்கள் மாண்பயன் எய்துவர். மானுடப் பரிணாம வளர்ச்சியில், வள்ளுவர் காண விரும்பிய இலக்கு இதுதான்.

இந்த இலக்கை நாம் புறக்கணிக்கின்றோம். நம் வாழ்வு அதற்கு எதிராகவே சென்று கொண்டுள்ளது. 'யான்', 'எனது' என்ற, வெறும் கருத்துருவான மையத்தை நாம் மிக அழுத்தமாகப் பற்றிக்கொண்டுள்ளோம். இந்த மையம் தன்னைச் சுற்றி ஏற்படுத்திக்கொள்கின்ற வட்டம், ஒவ்வொரு மனிதனையும் தனித்தனித் திட்டுகளாக ஆக்கிவிடுகிறது. நம்மைச் சிறைப்படுத்தியுள்ள அந்த வட்டம் ஏற்படுத்துகின்ற மருளும், அந்த மருள் உருவாக்குகின்ற உருவகங்களுமே நமக்கு மெய்மையாகத் தோன்றுகின்றன. பொருளல்லவற்றைப் பொருளென்று உணரும் இந்த மருள், மென்மேலும் பெருக்கம் காண்பதையும், அதனால் பிறக்கும் அறியாமை கடல்போல் பரந்து விரிவதையும் புரிந்துகொள்ளாமலே நாம் இருந்து கொள்கிறோம் வாழ்கிறோம் என்ற நினைப்பில் நாம் வெறுமனே உழன்று கொண்டுள்ளோம்.

ஆக, மனித மனத்திலுள்ள உருவகங்களே மனித உறவுக்குத் தடையாக உள்ளன. மெய்யுணர்வு பெறுவதற்கும் தடைக் கல்லாக இருப்பவை இந்த உருவகங்களே. அதனால் தான், இறையியல் வாழ்வை நமக்குக் காண்பிக்கின்ற வள்ளுவர், இறைவனை உருவகப்படுத்தாது விடுத்தார்.

மேலும், திருக்குறள் முதல் அதிகாரத்தில் கடவுள் என்ற சொல் இடம் பெறுவதில்லை. முப்பாலில் எப்பாலிலும், எந்த ஒரு குறளிலும் கடவுள் என்ற சொல்லை வள்ளுவர்

பயன்படுத்தவில்லை. 'சொல்லும் கூட ஓர் உருவகமே, மெய்மையை உணர்வதற்குச் சொற்களும் தடைகளே என்பார்' ஜே.கிருஷ்ணமூர்த்தி.

முதல் அதிகாரத்தில் இறையியல் குணங்களைச் சுட்டிக் காண்பிக்கின்ற வள்ளுவர் இறைவனை ஏன் உருவகப் படுத்தவில்லை என்பதைத் திருக்குறள் ஆர்வலர்கள் ஆழமாக எண்ணிப் பார்க்க வேண்டும். உருவ வழிபாடு வள்ளுவத்துக்குப் புறம்பானது. ஆதிபகவன், வாலறிவன், மலர்மிசை ஏகினான், வேண்டுதல் வேண்டாமை இலாதவன், இறைவன், பொறிவாயில் ஐந்தவித்தான், தனக்குவமை இல்லாதான், அறவாழி அந்தணன், என்றவாறு இறைவனின் குணங்களை வள்ளுவர் நமக்குக் காண்பிப்பதன் நோக்கம், மனிதர்கள் இக்குணங்களையெல்லாம் பெற வேண்டும், பெற்று வையத்துள் வாழ்வாங்கு வாழவேண்டும், வாழ்ந்து, வானுறையும் தெய்வமாக உயர்தல் வேண்டும் என்பதேயாகும். இறைவனை வள்ளுவர் உருவகப் படுத்தியிருந்தால், அவரது இப்பெரு நோக்கத்திற்கு அவ்வுருவகம் பெருந்தடையாக ஆகியிருக்கும். வள்ளுவத்தை ஆய்வு செய்பவர்கள் இக்கூறுபாட்டைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

## முழுமையான கவனத்தில் சிக்கல்கள் நீங்கும்

ஒரு சிக்கலில் நாம் செலுத்துகின்ற கவனம்தான் அந்தச் சிக்கலைத் தீர்க்கவல்ல ஆற்றலாகும். முழுமையான கவனத்தை நாம் செலுத்தும்போது, நம்மிடமுள்ள அனைத்தையும் கவனத்தில் ஒருமுகப் படுத்தும்போது, கவனிப்பவர் என்றொருவர் இருக்கமாட்டார். அங்கிருப்பது கவனம் மட்டுமே. அதாவது, நம்மிடமுள்ள ஒட்டுமொத்த ஆற்றல் அது. இந்த ஒட்டுமொத்த ஆற்றல், நமது நுண்மாண் நுழைபுலனின்(Intelligence) மிக உயர்ந்த வடிவமாம். அத்தகு மனநிலை, எந்த ஓசையுமற்ற,

எந்த அசைவுமற்ற ஓர் அமைதி நிலையில் இயல்பாக அமைவதாகும். முழுக்கவனநிலையில்தான் அத்தகு அமைதிநிலை, அமைவு காணும். வலுக்கட்டாயமாக இந்த அமைதியை வரவழைக்க முடியாது. கவனிப்பவர் என்றில்லாத, கவனிக்கப்படும் பொருள் என்றில்லாத அந்த முழு அமைதிநிலை, இறையியல் மனநிலை அல்லது. சமயத்தன்மை வாய்ந்த மனநிலையாகும். அந்த நிலையில் என்ன நிகழும் என்பதைச் சொற்களால் விளக்க முடியாது. அது என்னவென்று நாமே கண்டறிய வேண்டும். அதற்கு, அந்த மனநிலைக்கு நாம் செல்ல வேண்டும் என்கிறார் ஜே.கிருஷ்ணமூர்த்தி.

வெள்ளத் தனைய இடும்பை அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும் (குறள் 622)

இக்குறளில் உள்ள அறிவுடையான் என்ற சொல்லுக்கு, நுண்மாண் நுழைபுலம் உடையான்(Intelligent) என்று பொருள் கொள்ள வேண்டும். 'உள்ளத்தின் உள்ள' என்பதற்கு மனத்தில் நினைக்க என்று கொள்வது போதுமானதாக ஆகாது. முனைவர் தமிழண்ணல் அவர்கள், தமது திருக்குறள் நுண்பொருளுரை நூலில் இக்குறளுக்கு,'வெள்ளம்போல் பெருகி வரும் இடும்பைகளெல்லாம், அறிவுடைய ஒருவன், அவற்றைக் கடத்தல் எளிதே என்று தன் உள்ளத்தில் உரத்தோடு நினைத்த அளவில் கெடும். மனத்தளவில் திண்மையுடன் எண்ணும் எண்ணமே துன்பத்தை வெல்லும்' என்று பொருள் கூறியுள்ளார்.

எதிர்வரும் சிக்கலில் நமது முழுக்கவனத்தைச் செலுத்தினால், கவனிப்பவர் என்ற மையம் இல்லாத நிலையில், இருப்பது கவனம் மட்டுமே என்கின்ற நிலையில், நமது உள்ளம் கவனச் செறிவால் நிறைவுறும்; சிக்கல் அதிலே கரைந்துவிடும். வெள்ளமென வந்திடும் இடும்பையும், நுண்மாண் நுழைபுலமாகிய உள்ளத்தில் உள்ளப்பெற்றால், அஃது அகன்றுவிடும் என்பது பொருள்.

உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றுந்தான்
உள்ளியது உள்ளப் பெறின் (குறள் 540)

என்ற குறளையும் இங்கு நினைவு கூரலாம். உள்ளம், உள்ளுதல், உள்ளப்பெறுதல் போன்ற சொற்களில் பொதிந்துள்ள சிறப்புக் கூறுபாட்டைப் புரிந்து கொள்வது நன்றாகும். மனம் வேறு, உள்ளம் வேறு, நினைத்தல் வேறு; உள்ளுதல் வேறு. உள்ளப்பெறுதல் என்பதை உள்ளத்தில் வைத்து அசைபோடுதல் என்று பொருள் கொள்ளலாம். அறிவுடையான் உள்ளம், மாசறு காட்சி விளக்கம் பெறுதற்குரிய களமாகும்.அந்த விளக்கத்தில் 'அறியாமையெனும் இருள் அகன்று விடும். இருள் நீங்கி இன்பம் பயக்கும்'.

வாழ்வில் நாம் எதிர்கொள்ளும் ஒவ்வொரு சிக்கலும் மற்றச் சிக்கல்கள் ஒவ்வொன்றுடனும் தொடர்புடையது. ஆகவே ஒரு சிக்கலை, அது எதுவாக இருப்பினும், அதனை முழுமையாக நம்மால் தீர்க்க முடிந்தால், மற்ற எல்லாச் சிக்கல்களையும் நம்மால் தீர்த்துக்கொள்ள முடியும் என்கிறார் ஜே.கிருஷ்ணமூர்த்தி.

நாம் இங்கு பேசுவதெல்லாம் உளவியற் சிக்கல்களே. ஒரு சிக்கல், காலத்தின் மடியிலேதான் இருப்புக் கொள்கிறது. அதாவது, சிக்கல் ஒன்றை முழுமையாகத் தீர்க்காமல் காலத்தின் மடியில் விடுகிறோம். அப்படியில்லாமல் சிக்கல் ஒன்றின் இயல்பான தன்மையையும், கட்டமைப்பையும் அறிந்துணர்ந்து, அதனை முழுமையாகப் பார்ப்பதுடன் சிக்கல் எழுந்த அந்தக் கணத்திலேயே அதனை எதிர் கொண்டு தீர்த்துவிட வேண்டும். மனத்தில் அது காலூன்றத் தேவையான காலத்தை, வாய்ப்பை அளிக்காமல், உடனுக்குடன் தீர்க்க வேண்டும். அப்படியில்லாமல், ஒரு மாதம், ஒரு நாள், அல்லது சில நிமிடங்களேனும் அதை வைத்துக்கொண்டிருந்தால், மனத்தை அது திரிபுபடுத்திவிடும்.

மருளின் பிடியில் மனம் சிக்கிவிடும். அவ்வாறு சிக்குவதற்கு முன்பாக, சிக்கலை உடனுக்குடன் எதிர்கொண்டு, அதிலிருந்து விடுபட வேண்டும்.

'இடுக்கண் வருங்கால் நகுக' என்கிறார் வள்ளுவர். துன்பம் வரும்போது நம்மால் சிரிக்க முடியுமா? முடியும் என்றில்லாவிட்டால் வள்ளுவர் இவ்வாறு சொல்லியிருப்பாரா?

'யான்', 'எனது' என்ற மையம் இல்லாவிட்டால், வந்துற்ற துன்பத்தில் நமக்குச் சார்பு இராது. 'நமக்கு வந்த துன்பம்' என்ற உணர்வு இராது. மையம் இல்லாத நிலையில் இன்பமும், துன்பமும் வெறும் காட்சிப் பொருளேயாகும். மாசறு காட்சியே நம்முன் நிற்கும். மாசறு காட்சியில் இன்பத்துக்கும், துன்பத்துக்கும் எந்த வேறுபாடும் இருக்காது. ஆகவே தான், 'இடுக்கண் வருங்கால் நகுக' என்று வள்ளுவரால் கூற முடிந்தது.

## பயன்பட்ட நூல்கள்


1. FREEDOM FROM THE KNOWN, J.KRISHNAMURTI,64, Vasantha Vihar Greenways Road, Chennai - 600 028.

2. திருக்குறள் தெளிவுரை, டாக்டர் மு.வரதராசனார், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

3. திருக்குறள் கருத்துரை, இரா.இளங்குமரன், திருவள்ளுவர் தவச்சாலை, அல்லூர், திருச்சி - 620 101.

4. திருவள்ளுவர் அருளிய திருக்குறள் - நுண்பொருளுரை, தமிழண்ணல், மீனாட்சி புத்தக நிலையம், 48, தானப்பமுதலி தெரு, மதுரை - 625 001.

# சேக்கிழாரின் வரலாற்றுணர்வு

டாக்டர் அ.மா.பரிமணம்

நல்ல நண்பர்களான ஒரு சைவ அன்பரும் ஒரு வைணவ அன்பரும் கலந்துரையாடுங்கால், 'உங்கள் சைவ சமயத்திற்கு அமைந்துள்ள பெரிய புராணம் போல வைணவத்திற்கு ஒரு வரலாற்றுப் புராணம் அமையவில்லையே' என்று வைணவரும், 'உங்கள் வைணவ சமய நூலாகிய நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்கட்கு அமைந்த வியாக்யானங்களைப் போலச் சைவத் திருமுறைகளுக்கு வியாக்யானங்கள் அமையவில்லையே' என்று சைவரும் வியந்து ஏங்கினர் என்று கூறப்படுகின்றது. அந்த அளவிற்குப் பெருமை பெற்று விளங்குவது தெய்வச் சேக்கிழாரின் பெரிய புராணம். "பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவர்" என்று மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, சேக்கிழாரைப் போற்றிக் கூறிய மதிப்புரை புரைபடாத பொருளுரை ஆகும்.

சென்ற நூற்றாண்டின் இடைப்பகுதியில் பகுத்தறிவு என்னும் பெயரில் தோன்றிய ஓரியக்கம் இந்த நூலினை இழித்தும் பழித்தும் பேசியதோடு இதனை அழிப்பதற்குத் தீப்பந்தம் ஏந்தி நின்றது. காலப்போக்கில் அந்த எண்ணம் வலுவிழந்து போகத் தீப்பந்தம் ஏந்தியோர் பலர் நெய்ப்பந்தம் ஏந்திப் போற்றலாயினர். அதன் பெருமைக்கும், நிலைபேற்றுக்கும் அமைந்த காரணங்களில் கவிதை வளம், பக்தி உணர்வு முதலியவற்றோடு, அதன்கண் பொதிந்து கிடக்கும் வரலாற்றுணர்வும், வரலாற்றுச் செய்திகளும் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றன. சீர்திருத்தவாதியர் என்று கூறிக்கொண்டு அதன் பெருமைக்குச் சிறுமை கற்பிக்க முயன்றோர் வியக்கும் வண்ணம் பலவகையான சீர்திருத்தச் சிந்தனைகளைச் சேக்கிழார் தம் நூலில் நுட்பமாகப் புலப்படுத்தியுள்ளார்.

வேதநெறி தழைந்தோங்கவும், மிகு சைவத்துறை விளங்கவும் பூதபரம்பரை பொலியவுமாகப் பூந்தராயில் அவதாரஞ் செய்தருளிய ஞானசம்பந்தப் பிள்ளையாரை, முத்தீப்பேணி நாளும் அறம் வளர்க்கும் இருபிறப்பாளராகிய திருநீலநக்கர், விருந்தேற்றுத் தம்இல்லத்தில் விருந்தோம்பு கின்றார். தம் தொண்டர் குழாத்தொடும் திருநீலகண்டப் பெரும் பாணரொடும் சென்ற பிள்ளையார், நீலநக்கர் வேண்டுகோளுக் கிசைந்து அன்று இரவு அவரில்லத்தில் தங்க இசைந்தார். பிள்ளையார் நீலநக்கரிடம், " நீல கண்டப் பெரும் பாணர்க்கு, இன்று தங்க ஓர் இடம் கொடுத்தருளுவீர்" என வேண்ட, நீலநக்கர் பெருமகிழ்வுற்று, "நடுமனை வேதியின் பாங்கர்ச்" சென்று மற்றவர்க்கிடங்கொடுக்கின்றார். பாணர் தம் பாணியாருடன் வேதியின் அருகில் உறங்குகின்றார். அந்நிலையில், " வேதியில் அறாத செந்தீ வலஞ் சுழிவுற்று ஓங்கி முன்னையில் ஒருபடித்தன்றியே ஒளிர்ந்தது". என்று சேக்கிழார் குறிப்பிட்டுள்ளார். இதனைச் சேக்கிழார் கூறாவிட்டால், பிறவகையால் அறிந்து கொள்ளல் இயலாது. அக்காலத்தில் தாழ்ந்த குலம் எனக் கருதப்பட்ட குலத்தவர் ஒருவருக்கு அழலோம்பும் அந்தணர் இல்லத்தில் இரவு உறங்க இடங்கொடுக்குமாறு கூறுவதும், அதனை ஏற்றுத் தம் இல்லத்தினுள்ளே வேதிகையின் அருகில் உறங்க இடங்கொடுப்பதும், அதற்கு இறையொப்பு (சம்மதம்)க்கிட்டியதன் அறிகுறியாய், வேதிகையில் தீ வலஞ்சுழித்து ஒளிர்ந்தது என்று கூறியுள்ளதும் வியத்தற்குரிய சீர்திருத்தச் சிந்தனையாகாதா?

ஆதனூர்ப் புலைப்பாடியில் தோன்றி,'மெய்ப்பரிவு சிவன் கழற்கே விளைத்து'வளர்ந்த நந்தன் என்னும் புலையர், திருப்புன்கூரில் இறையருளால் நந்தி விலகப்பெற்று இறைவனை வணங்கிப் பின்னர்த் தில்லைத் திருப்பதிப் பெருமானை வணங்கும் ஆர்வத்தால் அந்நகர் சென்று, அதன் எல்லையில் நின்று பணிந்து, தம் குலப் புன்மை உணர்ந்து உட்புகாது

நின்றேங்கியதும், இறுதியில் இறையருளால் தில்லைத் திருநடங்கண்டு வழிபட்டுய்ந்ததும் சேக்கிழார் வாக்கால் நாம் அறிந்தனவாகும். தில்லையின் எல்லைப் புறத்தே நிற்கும் நந்தனை - திருநாளைப்போவாரை - எதிரேற்கச் சென்ற அந்தணர்கள் அவரை 'ஐயரே' என்று அழைத்து, இறையாணையை இயம்பியதாகச் சேக்கிழார் கூறியுள்ளார். பொத்தப்பி நாட்டு உடுப்பூரில் வனசரமரபில் -வேடர்குலத்தில்- தோன்றிய திண்ணப்பர் கண்ணப்பரான வரலாற்றினைச் சேக்கிழார் தம் புராணத்தில் கவினுறக்காட்டியுள்ளார். ஆண்டுகள் பல ஆகமநெறி வழுவாமல் வழிபாடு செய்து வந்த சிவகோசரியார் நிலையினும், ஆறுநாள் காட்டிய ஆரா அன்பினால் அரன் கழல் அருகிருக்கும் பேறு பெற்ற கண்ணப்பர் தம் நிலையின் ஏற்றம் கருதிச் சேக்கிழார் அவரை 'ஐயர்' என்று குறிப்பிடுகின்றார். "மெய்ம்மையின் வேறு கொள்ளாச், செவ்விய அன்பு தாங்கித் திருக்கையில் சிலையும் தாங்கி, மைவரை என்ன ஐயர் மருங்கு நின்று அகலா நின்றார்" என்பது சேக்கிழார் வாக்கு.

பெரியபுராணத்தில் இடம் பெற்றுள்ள இவைபோலும், சமுதாயச் சார்பான குறிப்புக்களைச் சிந்தித்து நோக்கினால் சில உண்மைகள் புலனாகும். வைதிக நெறி அடிப்படையிலான வருணபேதம் தமிழ்ச் சமுதாயத்தில் ஆழமாக வேர் விட்டிலங்கிய காலத்தில், ஆழ்வார், நாயன்மார்களால் உருவாகி வளர்ந்த பக்திஇயக்கத்தின் செல்வாக்கால், அருளாளர் களிடத்திலும் மெய்யடியார்களிடத்திலும் அந்தப் 'பேத உணர்வு' மங்கி மறைந்த நிலை விளங்கியதனை உணரலாம். இக் கருத்து வைணவத்திற்கும் உடன்பாடாமாற்றைத் திருப்பாணாழ்வார், இராமானுசர் போன்றோர் வரலாறுகள் உணர்த்தி நிற்கின்றன. மேலும் இத்தகு செய்திகள் கொண்டு, எதிர்காலத்தில் வருணாச்சிரம முறையினை எதிர்த்துச் செயற்படும் இயக்கங்களும், சான்றோர்களும் தோன்றுவதற்கான வித்து அங்குதித்துள்ள பாங்கினையும் உணரலாம்.

கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதி தொடங்கிக் கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டின் இடைப்பகுதி வரைத் தமிழகத்தில் சிறப்புற்று விளங்கிய, பிற்காலச் சோழர் வரலாற்றில் கம்பர், சேக்கிழார் ஆகிய இருபெருங்கவிஞர்கள் தோன்றித் தம் படைப்புக்களால் தமிழின் பெருமையை உயர்த்தினர். அவர்களுள் கம்பர், விண்ணகத்தின் நீங்கி, மண்ணகத்தே அவதாரம் செய்தவர்கள் எனக் கருதப்படுவோரைத் தம் காவியத் தலைவர்களாகக் கொண்டும், சேக்கிழார் மண்ணகத்தே மானிடர்களாய்த் தோன்றி, வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பெற்றவர்களாகக் கருதப்பெறும் மக்கள் வாழ்வினைப் பாடு பொருளாகக் கொண்டும் தம் நூல்களைப் படைப்பாராயினர். அதனால் வடஇந்திய அயோத்தி நகரில் அவதாரம் செய்தவராகக் கருதப்பெறும் இராமர் பற்றிக் கூறுவதும், வடபுலமொழிக் கவிஞரான வான்மீகியால் வடிக்கப் பெற்றதுமான இராம சரித்திரத்தினைத் தம் காவியக் கருவாகக் கொண்டார். அதற்கு வேறாகச் சேக்கிழார் மண்ணகத்தில் குறிப்பாகத் தமிழகத்தில் மக்களாய்த் தோன்றி வாழ்ந்தவர்களும், சுந்தரமூர்த்தி சுவாமிகளால் இனங்காட்டப் பெற்றவர்களுமான சைவ நாயன்மார்களின் வரலாற்றையே பாடுபொருளாகக் கொண்டு, 'திருத்தொண்டர் புராணம்' எனும் பெரிய புராணத்தைப் படைத்துள்ளார்.

சேக்கிழார், திருத்தொண்டர் புராணம் பாடியதற்கான காரணமாக் கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியார் தமது, 'சேக்கிழார் சுவாமிகள் புராணத்தில் கூறியுள்ளதனை (20-22) ஏற்பாரும் மறுப்பாருமாக ஆய்வாளர் அமைந்தனர். அஃதெங்ஙனமாயினும் சேக்கிழார் தமது புராணத்தை - சைவத் தொண்டர் வரலாற்றை வரையுமுன்னர் அதன் கட்டமைப்பு, உள்ளீடு ஆகியன பற்றித் துல்லியமான வரையறை செய்து கொண்டுள்ளார். சைவ சமய மூவர் முதலிகளுள் இறுதியில் இடம் பெற்றுள்ள சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய திருத்தொண்டத்

தொகை, அடியாக அமைய, நம்பியாண்டார் நம்பிகள் இயற்றிய திருத்தொண்டர் திருவந்தாதி கவடாக அமைய, அவற்றின் கோடாகிக் கிளையாகி, இலைகளாகி அமையும் பெரும்மரமாகப் படைத்தருளிய பெருமை சேக்கிழாரையே சாரும். இரட்டைக் காப்பியக் காலத்திற்குப் பின்னரும், தம் காலத்திற்கு முன்னரும் சுந்தரர் சுட்டிக் காட்டிய சைவத் தொண்டர்களைப் போன்ற சிலரைச் சேக்கிழார் அறிந்திருந்தாலும், சுந்தரர் காட்டிய நம்பிகள் சற்றே விரித்துக் கூறிய - தனியார்களுள் இடம் பெறாதவர்களைப் பற்றிக் கூறுவதில்லை எனும் கொள்கையால், பிறர் எவரையும் தம் நூலுள் சேர்க்கவில்லை. அந்தக் கொள்கை உறைப்பினால், திருவாசகம் அருளிய மாணிக்கவாசகர் வரலாறு பெரிய புராணத்துள் இடம் பெறாது போயிற்று. அது சைவ உலகின் தவக்குறையே யாகும்.*

ஆளுடையநம்பி, நம்பியாண்டார் நம்பி ஆகிய மூவரால் முறையே தொகை, வகை, விதிகளாகச் செய்யப்பட்ட மூன்று அருளிச்செயல்களையும் (திருத்தொண்டத் தொகை, திருத்தொண்டர் திருவந்தாதி, திருத்தொண்டர் புராணம்) முறையே வரை கோட்டுருவமாகவும் (Cartoon) புனையா ஓவியமாகவும், வண்ண ஓவியமாகவும் சுருதிப் பயன் கொள்ளலாம். சேக்கிழார் தமது படைப்பினைக் காவியத்திற் குரியனவாகக் கருதப்படும் நலங்களோடு பக்திச்சுவையினையும் வரலாற்றுணர்வையும் குழைத்தே உருவாக்கியுள்ளார். அதனைப் பத்தி உணர்வு மிக்கார் காணுங்கால் பக்திச் சுவை மிக்க இலக்கியமாகவும், வரலாற்றுணர்வு மிக்கார் காணுங்கால் வரலாற்றிலக்கியமாகவும் காணப்படுவது இயல்பேயாகும். தொன்ம வரலாறெனவும், உண்மை வரலாறெனவும் வரலாற்றினை இருவகையாகக் காணலாம். முன்னதற்குக் கற்பனை வளமும் பின்னதற்கு மெய்ம்மை சார்ந்த நம்பகத் தன்மையும் இன்றியமையாதனவாகும். சேக்கிழார் அனபாயசோழனின் அமைச்சராக விளங்கியவராதலால், தாம்

கூற எடுத்துக் கொண்ட தொண்டரின் வரலாற்றினைத் தம் காலத்திற்கு முற்பட்ட இலக்கியம், கல்வெட்டுக்கள், மரபுவழிச்செய்திகள் முதலிய பல்வகை அடிப்படைச் சான்றுகளைத் தேடி ஆராய்ந்து பயன் கொள்ளும் வாய்ப்பினைப் பெற்றிருந்தார். அதனால்தான், 'நாட்டமிகு தண்டி' என்ற சுந்தரர் வாக்கினை, ஒரு பாடலில் 'கண்ணார் மணி ஒன்றும் இன்றிக் கயிறு பிடித்தாற்கு' என்று நம்பியாண்டார் நம்பி விளக்கச் சேக்கிழார், இருபத்தைந்து பாடல்களில் விரிவுபடுத்திக் காட்டியுள்ளார். 'திருநின்ற செம்மையே செம்மையாகக் கொண்ட திருநாவுக்கரயன்' என்னும் சுந்தரர் வாக்கினை, நம்பியாண்டார் நம்பிகள், 'நற்றவன்' என்றும் 'மணியினை' என்றும் தொடங்கும் இரு பாடல்களால் (24, 25) விளக்கினார். அதனைச் சேக்கிழார், 423 விருத்தங்களில் பாடி அடுத்த பாடலில் "அடியேன் ஆதரவால் ஆண்ட அரசின் சரிதப் படியையான் அறிந்தபடி பகர்ந்தேன்" என்றுரைத்துத் தலைக்கட்டியுள்ளார்.

தாம் கூறும் தொண்டர் அல்லது தொன்ம வழித் தலைவர் பற்றிய செய்திகள் தமக்கு முன்னரே இலக்கியம் கல்வெட்டுப் போன்றவற்றில் கூறப்பட்டதாயினும் அவற்றை அப்படியே ஏற்றுச் சேக்கிழார் வழிமொழியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. திருவருள் துணையோடும், இயல்பான தமது வரலாற்றுணர்வோடும் அவற்றை ஆராய்ந்து தள்ளுவன தள்ளியும் கொள்ளுவன கொண்டும் தம் படைபினை நிறைவு செய்துள்ளார். அதனை விளக்கும் வகையில் ஓரிரு சான்று காண்பது தக்கதாகும். முதற்கண் அவர் பயன்படுத்திய தொன்ம வரலாற்றினைக் காண்போம்.

சைவத் திருத்தலங்களுள் 'கோயில்' என்று சிறப்பாகப் பேசப்பெறும் தில்லையினும் தொன்மைவாய்ந்தது திருவாரூர் எனக் கருதத்தக்க நிலையில், அதன் தொன்மையைத் திருநாவுக்கரசர், 'திகையெட்டும் தெரிப்பதற்கு முன்னோ

பின்னோ திருவாரூர் கோயிலாகக் கொண்ட நாளே' (6-34-9) என்றிங்ஙனம் பலவாறாக இயம்பிக் காட்டியுள்ளார். தமது திருத்தொண்டர் புராணத்திற்கு மூல பண்டாரமாக அமையும் திருத்தொண்டத் தொகை வழங்கிய சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் தம் நூலின் நாயகராக வரித்துக் கொண்டமையால், அவரது வரலாறு நூலின் தொடக்கம், நடு, இறுதி ஆகிய பகுதிகளில் இடம்பெறுமாறு அமைத்துள்ளார். அதனால், 'திருத்தொண்டத் தொகை' தோன்றுதற்கான களமாகவும், சுந்தரர் வாழ்க்கையின் பல நிலைகளோடு தொடர்புடையதாகவும் விளங்கிய, திருவாரூரினை ஓராற்றாற் பெருங்காப்பிய மரபொடு பொருந்துமாறு, நகரச் சிறப்புக் கூறப்படுதற்குரிய தலமாகக் கொண்டார். இறைநிலையில் தியாகேசரின் அருளாட்சியில் திகழும் திருவாரூர்க்கு, இறைபக்தியும் அறந்திறம்பா ஆண்மையு முடைய ஒரு சோழமன்னனை அரசானாக்கிக் காண விரும்பினார். வரலாற்றுச் சோழர் எவரும் திருவாரூரினைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரியாமையால் தொன்ம வழியாக ஒரு சோழனை அரசனாக்கியுள்ளார். அவ்வகையில் மனுநீதிச் சோழன் என்னும் சோழ மன்னனை வேந்தனாக்கி அவனது வரலாறு கூறலானார்.

ஓர் அரசனின் முன்னோர் மரபு பௌராணிக முறையிற் கூறுங்கால், தெய்வத்தொடர்போடு தொடங்குவது மரபு. அவ்வகையில் சோழ மன்னர் மரபினைச் சூரியமரபென்றும், ஏனைய பாண்டிய சேர மரபுகளை முறையே சந்திர அக்கினி வழியனவென்றும் கூறுவர். அவ்வகையில் சோழகுல முன்னோருள் ஒருவனாக மனு என்பவன் கூறப்படுவதனை, 'உலகத்தின் ஒரே கண்ணாக விளங்கும் சூரியனிடமிருந்து, அரசர்களில் முதல்வனான மனு பிறந்தான்', என்று திருவாலங்காட்டுச்செப்பேடுகள் (லெய்டன் பட்டயம்) கூறுகின்றன. மேலும் அவற்றில், இட்சுவாகு, மாந்தாத்திரி, முசுகுந்தன், வளவன்சிபி முதலியோர் முறையே தோன்றினர்

என்பதும் கூறப்பட்டுள்ளன. இம்முறையினைப் பின்பற்றிக் கலிங்கத்துப் பரணியும் சேர மரபின் முன்னோர்களைக் கூறும் நெடிய பட்டியலைக் குறிப்பிடக் காணலாம். வடநாட்டுத் தசரதன் முன்னோருள் ஒருவனாக மனு கூறப்படுவதனையும் கம்பர் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு கூறும் மரபு சமய உலகிலும் புகுந்துள்ளது. சமண சமய முதல்வராகிய மகாவீரவர்த்தமானர் இருபத்து நான்காவது தீர்த்தங்கரர் என்றும், அவருக்கு முந்தைய தீர்த்தங்கரர் தாய்வயிற்றுப்பிறவாதோர் (அயோனிசர்) என்றும் கூறப்பெறுவர். புத்தசமய முதல்வராகிய கௌதம புத்தருக்கு (சித்தார்த்தர்) முன்னர்ப் பல புத்தர்கள் இருந்துள்ளனர் என்றும் கூறுவர். திருமடங்களிற் சில தம் தோற்றத்தினைக் கயிலாயத்தொடு இணைத்துத் 'திருக்கயிலாய பரம்பரை' என்று வழங்கப்பெறுவதனை இன்றுங்காணலாம்.

வருணமுறை அடிப்படையிலான சமுதாய அறநூல் ஒன்று மனுதர்ம சாத்திரம் என்னும் பெயரில் வடமொழியில் அமைந்துள்ளது. சங்ககாலத்தை அடுத்த காலத்திலிருந்து தமிழக ஆட்சியில் இடம் பெற்ற அரசமரபினர் பலரும் வைதிகச்சார்புடையவர்களாய் இருந்தமையால் மனுதர்ம சாத்திரம் அவர்களின் ஆட்சியில் செல்வாக்குப் பெற்றிருந்தது. அறநெறி என்பதனை மனுநெறியாகவே கொள்ளப்பட்டு, மக்களும் மன்னரும் போற்றுவாராயினர். ஒரு மன்னனின் நீதி ஆட்சியைக்குறிக்க,'மனுவாறு தழைக்கவும் கலியாறு வற்றவும்' ஆண்டான் எனக் கல்வெட்டுக்கள் குறிப்பிடலாயின. (காலப்போக்கில் மக்களிடையே தோன்றிய சிந்தனை மாற்றத்தின் விளைவாக, 'வள்ளுவர் செய்திருக்குறளை மறுவற நன்குணர்ந் தோர்கள், உள்ளுவரோ மனுவாதி ஒரு குலத்துக்கொரு நீதி' எனும் எழுச்சிக்குரல் எழுந்தது தனி வரலாறு) தம் காலத்தில், தருமசாத்திரம் வரைந்த மனுவும், அவரது சாத்திரமும் பெற்றிருந்த செல்வாக்கினால், சோனாட்டுத் திருவாரூரில் இருந்து ஆட்சிபுரியும் சோழ அரசனாக மனுநீதிச் சோழன் என்பவனை

உருவாக்கியுள்ளார். மனு கூறும் தரும நெறியின் மேலாகவும் அறநெறி அமையும் என்பதனை உணர்த்தும் வகையிலும், அவனைப் படைத்துக் காட்டியுள்ளார். குறையாத இறையன்பும், குன்றாத ஆன்ம நேயமும் மாறாத அறமாண்பும் உடையவர்களாக அரசர்கள் இருத்தல் வேண்டும் என்பதற்கோர் எடுத்துக்காட்டாக மனுமுறைகண்ட சோழனைச் சேக்கிழார் படைத்துக்காட்டியுள்ளார். அதனால், அரச இலக்கணமாக அமையும் வகையில், 'தான் அதனுக்கு இடையூறு தன்னால்' என்று தொடங்கும் திருப்பாடலில் 'ஆனபயன் ஐந்தும் தீர்த்து அறங்காப்பான் அல்லனோ' என்று அம்மனுவேந்தனே பேசுமாறு செய்துள்ளார்.

நகரச்சிறப்புக் கூறும்பாங்கில், திருவாரூரினைப் பேசும் சேக்கிழார் ஐம்பது பாடல்களில் மனுநீதிச்சோழன் வரலாற்றைக் கூறியுள்ளார். விரிவாகக்கூறப்பெற்றுள்ள இந்தத்தொன்ம வரலாற்றிற்குப் பழமையான சான்றாகக்கிடைப்பன சிலப்பதிகாரத்தில் இடம்பெற்றுள்ள நான்கே அடிகளில் அடங்கும் இரு குறிப்புக்களாகும். 'யாரையோ நீ மடக்கொடி' என வினவிய பாண்டியன் நெடுஞ்செழியனுக்குக் கண்ணகியுரைத்த மாற்றத்தில்,

" வாயிற்கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத் தான்தன்
அரும் பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்", (சிலப். வழக்குரை 51 - 53) என்றும், பின்னர் வாழ்த்துக்காதையில் 'கறவைமுறை செய்த காவலன்' என்றும் (சிலப். வாழ்த்து. அம்மானை) அமைந்தனவே அக்குறிப்புக்கள். பின்னர்ப் பழமொழி, மூவருலா போன்றவற்றுள்ளும் இலக்கியக் குறிப்புக்களாக இடம்பெறுகின்றன. இவ்விடங்களில் இந்நிகழ்ச்சி - கறவைமுறை செய்த நிகழ்சி, திருவாரூரில் நிகழ்ந்தது என்று கருதுவதற்கிடமின்று. சேக்கிழாருக்குப் பின்னர்த் திருவாரூர்பற்றி

எழுந்த நூல்களில் இந்நிகழ்ச்சி இடம் பெற்றால் வியப்பதற்கில்லை. அரண்மனை வாயிலில் கட்டியுள்ள மணியின் நா (அசைந்து ஒலிக்க) நடுங்க, பசுவின் கண்ணீர் தன் நெஞ்சினைச் சுட, தன் அருமைப்புதல்வனைத் தேர்க்காலில் இட்டு மடிவித்தசோழன் என்பதும், தாய்ப்பசுவிற்கு முறை புரிந்தவன் என்பதும் இளங்கோவடிகள் குறிப்பிட்ட சான்றுகளின் கருத்துக்களாகும். இச்செய்தியினைக் கூறக்கேட்ட அளவில் பாண்டியனால் அறிந்துகொள்ளுமளவு இச்செய்தி அக்காலத்தே ஆள்வோரிடமும் ஆளப்படுவோரிடமும் பரவியிருந்தது என்பதனை அறிந்துகொள்ளலாம்.

அக்காலத்திலேயே இச்செய்தி சில திரிபுகளோடு மக்களிடையே நிலவி, இடைக்காலக் கல்வெட்டில் இடம்பெற்று நிலைபேறு கொண்டதனையும் காணமுடிகின்றது. சேக்கிழார் காலத்திற்குச் சற்றே முற்பட்ட சோழவேந்தனாகக் கொள்ளப் பெறும் விக்ரம சோழனது (கி.பி.1118 - 1136) ஐந்தாம் ஆட்சியாண்டில் (1123) பொறிக்கப்பெற்றுள்ளதும், திருவாரூர் திருக்கோயில் வீதிவிடங்கன் சன்னதிச் சுவர் ஒன்றில் இடம்பெற்றுள்ளதுமான ஒரு கல்வெட்டில் மனுநீதிச் சோழன் வரலாறு இடம்பெற்றுள்ளது. இறைவன் கூற்றாக அமைந்த அச்செய்தி, " ......... நம் ஏவலால் பூலோக ராஜ்யம் செய்கின்ற சூரிய புத்திரன் மனு தன் புத்திரன் ஏறிவருகின்ற தேரில் பசுவின் கன்றகப்பட்டுப் பிரமாதப்பட அதின்மாதாவாகிய சுரபி கண்டு துக்கித்து மனுவின் வாசலில் மணியை எறிய, அதுகேட்டு மனு தன் மந்திரி இங்கணாட்டு பாலையூறுடையான் உபயகுலா மலனைப் பார்த்து நீ சென்று இதனை அறிந்து (வா என்று கட்டளையிட, அவன் பார்த்துவந்து) வாயிற்புறத்து ஒரு பசு மணி எறியா நின்றது என்று சொல்ல, அதுகேட்டு மனு புறப்பட்டுப் பசுவையும் பட்டுக்கிடந்த (கன்றையும் பார்த்து நிகழ்ந்த) படிவினவி, தன் புத்திரன் ஏறின தேரிலே பட்டமை அறிந்து அக்கன்றுக்கு நேராக, தன் புத்திரன் பிரிய விரதனை தேரிலே

ஊர்ந்து கொடுக்கவென்று......", என்று சொல்லுகின்றது. இதில் மனுவின் பெயர் உபயகுலாமலன் என்பதும், மனுவின் மகன் பெயர் பிரியவிரதன் என்பதும், தேர்ஊர்ந்து கொல்லுமாறு ஏவப்பட்டவன் பெயர் துவாரபாலகன் என்பதும், மனுவின் மகனுக்கு உபயகுலாமலன் மகன் சூரியனைச் சிவபெருமானே அமைச்சன் ஆக்கினார் என்பதும் முதலான செய்திகள் இடம்பெற்றுள்ளன. இப்பெயர்களுள் எதனையும் சேக்கிழார் மேற்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. தமிழகத்தின் மூலைமுடுக்குகளில் நிகழ்ந்தன வெல்லாம் அறிந்து கூறிய சேக்கிழாருக்கு - சிறுத்தொண்ட நாயனாரின் துணைவியாருக்குப் பணிப்பெண்ணாக அமைந்த பெண்ணின் பெயரையும் அறிந்து குறிப்பிட்ட (சந்தன நங்கை) சேக்கிழாருக்குத் தம் காலத்திற்குச் சில ஆண்டுகளே முற்பட்ட அரசனின் கல்வெட்டுச் செய்தியினை அறியாதிருத்தல் கூடுமோ? அறிந்திருந்தால், அக்கல்வெட்டுக் கூறும் பெயர்கள் எதனையும் புராணத்திற் குறிப்பிடாது விட்டமைக்குக் காரணம் யாது எனும் ஐயம் எழுவது இயல்பன்றோ? தொன்ம அடிப்படையிலான ஒரு வரலாற்றுக்கு உண்மை வரலாறு போலத் தோற்றமளிக்கும் வகையில் செய்தியினைக் கூறுவது, கல்வெட்டுச் செய்தியேயாயினும் அதனை உடன்படச் சேக்கிழாரின் வரலாற்றுணர்வு இடந்தரவில்லை என்பதே கருத்தாகும். மனுநீதிச் சோழன் வரலாறு பற்றிய முற்கால இலக்கியக்குறிப்பினை ஏற்றும், தமக்கு முற்பட்டதாயினும் அது பற்றிக்கூறப்பெற்ற கல்வெட்டுச் செய்தியினைப் புறக்கணித்தும் செயற்பட்டதன் மூலம் சேக்கிழார்தம் வரலாற்றுணர்வின் மாண்பினை அறியலாம்.

சேக்கிழாருக்கப்பின் வந்த புலவர்கள் அவர் கூறியுள்ள மனுநீதிச் சோழன் பற்றிய தொன்ம வரலாற்றினை ஏற்றுத் தங்கள் கருத்தையும் இணைத்து உரை நடையாகவும், செய்யுளாகவும் எழுத முற்பட்டனர். அந்தவகையில், ஈசன் பசுவாகவும், இய்மன் கன்றாகவும் வந்து மனுச்சோழனின் அறமாட்சியினை அவனி

அறியச்செய்தனர் எனக் கற்பித்து வரையப்பெற்ற தமிழ்ப்பாடலொன்று வருமாறு:-

ஈசன் பசுவாகி ஏமனொரு கன்றாகி
வீசு புகழ் ஆரூரின் வீதிவந்தார் அம்மானை
வீசு புகழ் ஆரூரின் வீதிவந்தார் ஆமாயின்,
காசளவு பாலும் கறவாதோ அம்மானை,
கன்றை உதை காலி கறக்குமோ அம்மானை?

அடுத்து உண்மை வரலாற்றினைக் கூறுங்கால் அவரது வரலாற்றுணர்வின் செயற்பாட்டினை ஒரெடுத்துக்காட்டின் வாயிலாகக் காணலாம். திருத்தொண்டத்தொகை பரவும் தனியடியார்களுள் தேவார மூவர் தவிர எஞ்சியவர்களில் பெரும்பாலான திருமுறைகளால் போற்றப்பெறுபவர் கண்ணப்பரேயாவார். அவர், ‘அன்பு பிழம்பாயினார்’ என்று சேக்கிழாராலும், ‘கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்’ என்று மணிவாசகராலும், ‘நாளாறில் கண்கிடந்து அப்பவல்லேன் அல்லேன்’ என்று பட்டினத்தடிகளாலும் இவ்வகையில் பிறராலும் சிறப்பிக்கப்பெற்றவராவர். அவரைப்பற்றி எழுந்த இலக்கியங்களில் காணப்பெறும் வேறுபாடுகளை ஒழுங்குபடுத்திச் செம்மையாக்கிச் சேக்கிழார் வரலாறு வடித்துள்ளார். “பேறினி இதன் மேலுண்டோ” என்று சேக்கிழாரே வியந்து போற்றுமாறு “என் வலத்தில், மாறிலாய் நிற்க” என இறைவனால் அருளப்பெற்ற கண்ணப்பர் வரலாறு, அவருக்கு முன்னரே இருவரால் இருபிரபந்தங்களாக இயற்றப் பெற்றுள்ளது. அவற்றின் காலம் இதுவெனத் துணிந்து கூறுவதில் சிரமம் உளதாயினும், அவை பதினோராந்திருமுறை தொகுக்கப் படுவதற்கு முன்னர் இயற்றப்பெற்றன என்பதில் ஐயமின்று. இருநூல்களும் சைவத்திருமுறைகளுள் பதினோராந் திருமுறைக்கண் அடக்கப் பெற்றுள்ளது. ‘திருக்கண்ணப்ப தேவர் திருமறம்’ என்னும் ஒரே பெயரில் அமைக்கப்பெற்ற

அவ்விருநூல்களுள் முதலாவது, நக்கீர தேவ நாயனாரால் 157 அடிகளில் இயற்றப்பட்ட ஆசிரியப் பாவாகவும், இரண்டாவது கல்லாடதேவநாயனாரால் 38 அடிகளில் இயற்றப்பட்ட ஆசிரியப்பாவாகவும் உள்ளன.

அவ்விரு வரலாறுகளிலும், சேக்கிழாரின் கண்ணப்ப நாயனார் புராணத்திலும் இடம் பெற்றுள்ள செய்திகளை நோக்குமுன்னர் அவ்விரு நூல்களின் ஆசிரியர்கள் பற்றிய சில செய்திகளை நினைவு கூர்வது ஏற்புடையதாகும். நக்கீரதேவ நாயனார் பற்றி ஆராய்ந்தவர்களில் சிலர், சங்கநூல்களாகிய பாட்டும் தொகையும் என்பனவற்றில் இடம்பெறும் நக்கீரரும், பதினோராந் திருமுறையில் இடம்பெற்றுள்ள - நக்கீரதேவ நாயனார் என்னும் பெயரில் உள்ள பிரபந்தங்களின் ஆசிரியரான நக்கீரதேவரும் ஒருவராகவே கருதி வரலாறு எழுதியுள்ளனர். காலப்போக்கில் வளர்ந்த தமிழாய்வின் பயனாக அவர்கள் வெவ்வேறானவர்கள் என்பது தெளிவாயிற்று. அவ்வாறே, சங்கப்புலவர்களுள் ஒருவராய கல்லாடரும், கல்லாடம் எனும் நூலினை எழுதிய கல்லாடரும், பதினோராந் திருமுறைக் கல்லாட தேவரும் ஒருவரே எனக்கருதிய மயக்க உணர்வும், பின்னர்த் தோன்றிய ஆராய்ச்சிகளினால் நீங்கி, அவர்கள் வெவ்வேறானவர்கள் என்னும் தெளிவு ஏற்பட்டது மகிழ்ச்சியளிப்பதாக உள்ளது.

நக்கீரதேவரின் நூல் இறுதியில், ஒரு வெண்பா இடம் பெற்றுள்ளது.

“தத்தையாந் தாய்தந்தை நாகனாந் தன்பிறப்புப்
பொத்தப்பி நாட்டுடுப்பூர் வேடுவனாம் - தித்திக்கும்
திண்ணப் பனாஞ்சிறுபேர் செய்தவத்தாற் காளத்திக்
கண்ணப்ப னாய்நின்றான் காண்”-என்பது அந்த வெண்பா கண்ணப்பரின் இயற்பெயர் (திண்ணன்), பெற்றோர் பெயர்

(நாகன்- தத்தை), ஊர்ப்பெயர் (பொத்தப்பி நாட்டு உடுப்பூர்) எனும் விவரம் இந்த வெண்பாவில்தான் கிடைக்கின்றது. பிரபந்தத்துள் கூறப்பெறாது, அதுமுடிந்தபின் அமைந்துள்ள வெண்பா இயல்பையும், செய்தியினையும் நோக்குமிடத்து அவ்வெண்பா, நக்கீரதேவரால் இயற்றப்பெறாது, சேக்கிழாருக்குப் பின்னர்த் தோன்றிய புலவர் ஒருவரால் இயற்றப்பெற்றுச் சேர்க்கப்பெற்றிருத்தல் வேண்டும் என்பது புலனாகும். தமிழிலக்கியத்தில் இது போலும் சேர்க்கை இருந்து வந்துள்ளது என்பதனைத் திருமுருகாற்றுப் படையின் இறுதியில் இடம்பெறும் வெண்பாக்கள் பற்றித் திருமிகு உ.வே.சா. அவர்கள் கூறியுள்ள குறிப்பினைக் கொண்டும், சிலம்பின் சில காதைகளின் இறுதியில் இடம் பெற்ற சில வெண்பாக்கள் பற்றி நாவலர் நாட்டாரையா அவர்கள் கூறியுள்ள குறிப்பினைக் கொண்டும் உணரலாம்.

நக்கீரதேவர் கல்லாடதேவர் ஆகிய இருவர்தம் திருமறங்களும் கண்ணப்பரின் இளமைமுதற்கொண்டு, மலைமருந்தாகிய குடுமித்தேவரை ஆறுநாள் வழிபட்டு, ஆறாம் நாளிறுதியில் இறைவனுக்குக் கண் இடந்து அப்பி அவரால் அவரருகே வலப்பக்கம் இருக்கும் பேறு (சாமீபயப் பதம்) பெற்ற பாங்கினைக் கூறவில்லை. கண்ணப்பன் கானவனாய்ப் பூசை புரிந்தமை, மறையாளன் ஆகமவழிப் பூசை புரிந்தமை, இறையருளால் அந்தணர் உண்மை அன்பின் அற்புதத்தை அறிதல், கண்ணப்பன் வீடு பெற்றமை ஆகியன பற்றி மட்டுமே கூறுகின்றன, ஆகமவழிப் பூசனை புரிந்த மறையாளன் பெயர் கோசரி என்பதனைக் கல்லாடர் மட்டுமே கூறுகின்றார். இருவர் நூலிலும் வேட்டுவர் இயல்பு, செயல்கள் ஆகியன விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன. கண்ணப்பர் நிகழ்ச்சி காளத்திக்குன்றுறையும் கண்ணுதலார் முன்பு நிகழ்ந்ததென நக்கீரதேவரும், கானப்பேர் இறைவன் முன்பு நிகழ்ந்தது எனக் கல்லாடரும் கூறியுள்ளனர். இந்த முரண்பாடு திருமுறைநூல்களாகக் கருதப்படுவனவற்றில் இடம் பெறலாகாது என்பதனை உளங்கொண்ட பேராசிரியர்

வெள்ளைவாரணனார் போன்றவர்கள் அதற்கு அமைதிகாண முற்பட்டு விளக்கம் தந்துள்ளனர் ( பன்னிரு திருமுறை வரலாறு-பகுதி இரண்டு).

நக்கீரனின் கண்ணப்பர் வேடர்குலத் தலைவனாக விளங்கும் நிலையில் நூலில் தோற்றம் கொள்கிறான். தாயை நாடிச்செல்லும் கன்றினைப் போலக் காளத்திச்சிவனை நாடோறும் விரைந்து சென்று கண்டு அவன் திருவடி வணங்கியல்லது உணவு உட்கொள்ளாத வழக்கமுடையவன். கொன்ற விலங்கின் கொழுங் குறையைத் தீயில் வாட்டி, அதன் சுவையறிந்து, நல்லனவற்றை இறைவனுக்காகக் கொண்டுசெல்வான், வாயே கலசமாகச் சுனை நீரை நிறைத்துக்கொள்வான், மலர்களைத்தம் குஞ்சியில் செருகிக் கொள்வான். இறைச்சி அமுதினை ஒரு கையிலும், வில்லினை ஒருகையிலும் ஏந்தித் தன் நாய் பின்தொடரச்சென்று பூசனை புரிவான். இதனை அனுசிதமாகக் கண்டும் முரட்டுவேடனை அஞ்சி, அந்தணர் இறைவனிடம் முறையிட, அவர் அருளால் கண்ணப்பும் செயல் நிகழ உண்மை உணர்கின்றார். கண்ணப்பன் வீடுபேறு எய்துகின்றான். கல்லாடரின் திருமறத்தில் இந்த அளவிற்குக் கூடச் செய்திகள் இடம்பெறவில்லை. அதற்கு நூலின் சுருக்கம் (37 அடிகள்) காரணமாகலாம். கண்ணப்பர் வரலாறு பற்றிய தொன்மையான நூல்கள் என்பதனால் இவற்றையும் திருமுறை வகுத்தோர் ஏற்றுத் திருமுறைவரிசையில் பதினொன்றாம் திருமுறையில் இணைத்துள்ளனர். இவற்றையெல்லாம் அறிந்த சேக்கிழார் இவற்றில் கொள்ளத்தக்கன கொண்டும், தம் தேடலில் கண்டறிந்த உண்மைகளை ஏற்றும், முந்தைய பிற திருமுறை அருளாளர் திருவாக்குக்கள், கல்வெட்டுக்கள், மரபுச்செய்திகள், தம்காலச்சிற்ப ஓவிய வெளிப்பாடுகள் போன்றவற்றையெல்லாம் பயிற்றகத்தடக்கித் தமது கண்ணப்பர் வரலாற்றினை உருவாக்கியுள்ளார். முந்தைய இருவர் திருமறங்களில் இடம்பெறும் சில கருத்துக்களையும், தொடர்களையும் தமக்கு

இயையும் வகையில், தமது கண்ணப்பர் புராணத்தில் அவற்றைப் போற்றிக் கொள்ளச் சேக்கிழார் தயங்கவில்லை.

சேக்கிழார் தம் உள்ளக்கிழியின் உருவெழுதி, வண்ண இலக்கியக்குழம்பில் பக்தி உணர்வைக் குழைத்து, இறைவன் அளித்த இளமைத்தூரிகைகொண்டு வரைந்த வண்ண ஓவியமே கண்ணப்ப நாயனார் புராணம் ஆகும். கற்பனை அழகு வாய்ந்த இலக்கிய இயல்பும், அற்புத ஆற்றல் மிக்க பக்தி உணர்வும், மெய்மையால் ஒளிகாலும் வரலாற்று மாட்சியும் ஒன்றின் ஒன்று விஞ்சிக் களிநடனம் புரியும் குறுங்காப்பியமாகவே சேக்கிழார் தம் கண்ணப்பர் வரலாற்றைப் படைத்துள்ளார்.

கண்ணப்பர் தோன்றியதால் அவர் தோன்றிய பொத்தப்பி நாடு கண்ணப்பர் திரு நாடு எனும் சிறப்புப்பெற்றதாகும். அதன்-கண் அமைந்த உடுப்பூரில் வேடர்தலைவனாம் நாகனுக்கும் தத்தை என்பாருக்கும் மகவாய்த்தோன்றியவர் கண்ணப்பர். குறிஞ்சிநிலத் தலைவனாகிய நாகன் மகப்பேறின்மையால் குறிஞ்சித்தெய்வமாகிய முருகுவேளைத் தம் குல மரபுப்படி வழிபட்டு மகப்பேறெய்தினான். 'பான் மதி உவரி ஈன்றால் எனப்'பிறந்த மகனாகிய திண்ணப்பனே பிற்றை நாளில் கண்ணப்பனாயினான். ஈரெட்டாண்டகவை எய்திய பின்னர் வேட்டுவத்தலைமை பூண்ட திண்ணப்பன், நாணன் காடன் என்னும் தன் நண்பர்களோடு கன்னிவேட்டையாடச் சென்று, காளத்தியப்பனின் கண்வலைப்பட்டு, நாளாறில் தன் கண்ணை இடந்து இறைவன் கண்ணில் அப்பி அதனால் கண்ணப்பராகும் சிறப்பும், ஆடும் அம்பலக்கூத்தனின் அருகிருக்கும் பேறும் பெற்ற வரலாற்றினைச் சேக்கிழார் சொல்லோவியம் காட்டக் காணலாம். மலத்தால் கட்டுண்ட ஓரான்மா, திருவருளால் பாசநீக்கம், இருவினை ஒப்பு, சத்தி நிபாதம் முதலியன எய்தப்பெற்றுச் சோபான முறையில் உயர்நிலை யெய்தித் திருவருளில் திளைக்கும் என்னும் சித்தாந்த சைவ உண்மையைத்

தெரிக்கும் உட்பொருள் பொதிந்ததாகச் சேக்கிழார் தம் கண்ணப்பர் வரலாற்றை வரைந்துள்ளார். அந்த உண்மையை அறிஞர் பலரும் விளக்கிக் காட்டியுள்ளனர்.

அறுபான் மும்மை நாயன்மார் நிரலில் மரபாக இடம்பெறுவதோடு சில சிவாலயங்களில் கண்ணப்பருக்குத் தனிச்சிற்றாலயமும், சிலை செம்பு முதலியவற்றால் திருமேனிகளும் அமைக்கப்பெற்று இன்றும் வழிபாட்டில் இடம் பெற்றுள்ளன. தேவார மூவர் வரலாறுகளைப்போலவே நம்பகத்தன்மை சான்றாகக் கண்ணப்பர் வரலாற்றினைச் சேக்கிழார் இலக்கியப்படுத்தியுள்ளார். 'முன்னோர் மொழி பொருள்' என்று எதனையும் ஆராயாமல் ஏற்றுக்கொள்ளாது தக்கவற்றை ஏற்றுக்கொண்டு, தாம் மெய்யாகக் கண்ட செய்திகளோடு இணைத்துப் பக்தியால் வரலாற்றுண்மையும், வரலாற்றுச் செய்தியால் பக்தியுணர்வும் மாறுபடாமல் தமது படைப்பினை இலக்கியப்படுத்தியிருப்பது சேக்கிழாரின் தனிப்பெருமையாகும்.

# 'சிறுகதைக்கு ஒரு புதுமைப்பித்தன்'

*முனைவர் இரா.மோகன்*

இருபதாம் நூற்றாண்டின் விடியலில் தமிழ்க் கவிதைக்குப் புத்துயிரும் புதுப்பொலிவும் ஊட்டியவர் பாரதியார்; அதுபோல் தமிழ்ச் சிறுகதைக்குப் புதுவண்ணமும் புதுவனப்பும் தந்தவர் புதுமைப்பித்தப. தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் புதுமைப்பித்தனுக்கு நிலையான ஓர் இடம் உண்டு. சிறுகதைத் துறையில் அவர் செய்து காட்டிய சோதனைகளும் சாதனைகளும் அவருக்கு அத்தகுதியை அளிக்கின்றன. "கம்பனை நீக்கிய காப்பிய வரலாறு எத்தகைய கருத்தற்றதோ அத்தகைய கருத்தற்றது புதுமைப்பித்தனை நீக்கிய சிறுகதை வரலாறு" என்னும் அறிஞர் கா.சிவத்தம்பியின் கூற்று நூற்றுக்கு நூறு உண்மை.

கவிதை, கட்டுரை, நாடகம், மொழி பெயர்ப்பு, மதிப்புரை என்றாற் போல் பல்வேறு துறைகளில் புதுமைப்பித்தன் தம் படைப்பாற்றலை வெளிப்படுத்தி இருந்தாலும், புதுமைப்பித்தன் என்றதும் நம் நினைவுக்கு உடனே வருபவை அவரது சிறுகதைகளே ஆகும். அந்த அளவிற்குச் சிறுகதைகளில் தம் முத்திரையை அழுத்தமாகவும் ஆழமாகவும் பதித்துள்ளார் புதுமைப்பித்தன். எழுத்தாளர் ஜெயகாந்தன் 'புதுமைப்பித்தன் படைப்புகள்' (புதுமைப்பித்தனின் 95 சிறுகதைகள் அடங்கிய முழுத் தொகுப்பு) என்னும் தொகுப்பு நூலுக்கு எழுதிய அணிந்துரையில் குறிப்பிடுவது போல், "புதுமைப்பித்தனுக்கு முன்னாலும் பின்னாலும் தமிழில் சிறுகதை எழுதியவர்கள் உண்டு. எனினும் உலக இயக்கத்தின் தரத்துக்கு இணையாக உயர்ந்து நிற்கும் சிறுகதைகளைப் படைத்து அளித்தவர் புதுமைப்பித்தனே ஆவார். இக்கூற்று புகழுரை அன்று; எக்காலத்திலும் எவரும் பெருமிதத்தோடு நினைவு கூர வேண்டுமென்பதற்கு அடையாளமே இந்த நூல்."

ஆம்; 'காவியத்துக்கு ஒரு கம்பன்', 'கவிதைக்கு ஒரு பாரதி' என்றால், 'சிறுகதைக்கு ஒரு புதுமைப்பித்தன்' என்று தமிழ் கூறு நல்லுலகில் பறை கொட்டிச் சொல்லலாம்; பெருமையோடும் பெருமிதத்தோடும் சொல்லலாம்.

"ஒரு கவியுள்ளம் – சோகத்தினால் சாம்பிய கவியுள்ளம் – வாழ்க்கை முட்களில் விழுந்து இரத்தம் கக்குகிற உள்ளம் – கதைகள் மூலம் பேசுகிறது" என்று புதுமைப்பித்தன் வாழ்ந்த காலத்திலேயே அவரது சிறுகதைத் தொகுதிக்கு எழுதிய முன்னுரையில் ரா.ஸ்ரீ.தேசிகன் குறிப்பிட்டுள்ளார். இதைவிடச் சிறப்பாகவும் சரியாகவும் வேறு யாரும் புதுமைப்பித்தனின் சிறுகதைகளைப் பற்றிச் சொல்லிவிட முடியாது என்பதே முற்றிலும் உண்மை; முக்காலும் உண்மை.

## நகைச்சுவையும் நையாண்டியும்

'கவச குண்டலங்களோடு பிறந்தவன் கர்ணன்' என்பார்களே, அதுபோல் நகைச்சுவையும் நையாண்டியும் புதுமைப்பித்தனோடு ஒட்டிப் பிறந்த இரட்டைப் பண்புகள் எனச் சொல்லலாம். அந்த அளவிற்குப் புதுமைப்பித்தனின் ஆளுமையில் – மொழி நடையில் நகைச்சுவையும் நையாண்டியும் இயல்பாகக் கலந்து நிற்பதைக் காணலாம். இன்னும் சொல்ல வேண்டும் என்றால், கொஞ்சம் நகைச்சுவை, கொஞ்சம் நையாண்டி, கொஞ்சம் கேலி, கொஞ்சம் கிண்டல், கொஞ்சம் குத்தல், கொஞ்சம் அங்கதம் அத்தனையும் சேர்ந்து அமைந்ததே புதுமைப்பித்தனின் நடை எனலாம். சான்றாக, 'கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும்' என்ற அவரது கதையில் நகைச்சுவை, நையாண்டி, கேலி, கிண்டல், குத்தல், அங்கதம் அத்தனையும் அணிவகுத்து வருவதைக் காணலாம். கதையின் தொடக்கத்தில் "ஐயா, திருவல்லிக்கேணிக்கு எப்படிப் போகிறது?" என்று கேட்கும் கடவுளிடம் கந்தசாமிப் பிள்ளை கூறும் பதில் வருமாறு:

"டிராமிலும் போகலாம், பஸ்ஸிலும் போகலாம், கேட்டுக் கேட்டு நடந்தும் போகலாம்; மதுரைக்கு வழி வாயிலே."

அடுத்து, கடவுள் கந்தசாமிப் பிள்ளையின் வீட்டிற்குச் செல்கிறார். கந்தசாமிப் பிள்ளையின் குழந்தையைப் பார்த்ததும் "இது தான் உம்முடைய குழந்தையோ?" என்று கேட்கிறார் கடவுள். குழந்தையின் மீது விழுந்த கண்களை மாற்ற முடியவில்லை அவருக்கு. கந்தசாமிப் பிள்ளை சற்றுத் தயங்குகிறார். இந்த இடத்தில் கடவுள் சிரித்துக் கொண்டே கூறுவதாகப் புதுமைப்பித்தன் எழுதியிருக்கும் அற்புதமான வரிகள் இதோ: "சும்மா சொல்லும். இப்போதெல்லாம் நான் சுத்த சைவன்; மண்பானைச் சமையல்தான் பிடிக்கும். பால், தயிர் கூடச் சேர்த்துக் கொள்வதில்லை". சிறுத்தொண்ட நாயனாரிடம் பிள்ளைக் கறி கேட்டவர் அல்லவா கடவுள்? இதுதான் கந்தசாமிப் பிள்ளையின் தயக்கத்திற்குக் காரணம் என இங்கே பழைய புராணக் கதையையே போகிற போக்கில் வம்புக்கு இழுக்கிறார் புதுமைப்பித்தன்.

பூலோகத்தின் பல்வேறு இடங்களைக் கந்தசாமிப் பிள்ளையோடு சுற்றிப் பார்த்த பிறகு – பல்வேறு மனிதர்களுடன் பழகிப் பார்த்த பிறகு – கடவுள் எடுக்கும் முடிவு என்ன தெரியுமா? இதோ புதுமைப்பித்தனின் சொற்களிலேயே அதனைக் காண்போம்:

"உங்களிடமெல்லாம் எட்டி நின்று வரம் கொடுக்கலாம்; உடன் இருந்து வாழ முடியாது".

இங்ஙனம் 'கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும்' கதையில் கண்ணில் பட்ட இடமெல்லாம் தட்டுப்படுவன நகைச்சுவையும் நையாண்டியும் தான்! கேலியும் கிண்டலும் தான்!

## கவித்துவம் களிநடம் புரியும் நடை

புதுமைப்பித்தனின் மொழி நடையில் ஆங்காங்கே சுருக்கமும் செறிவும் அணி செய்து நிற்பதைக் காணலாம்; கலை நயமும் கவித்துவப் பாங்கும் களிநடம் புரிவதைக் காணலாம். சான்றாக, 'பாரதிதாசன்' என்ற அவரது கட்டுரையின் தொடக்க வரியினை இங்கே சுட்டிக்காட்டலாம்:

''பாரதியார் இன்று நமக்கு வைத்துவிட்டுப் போன சொத்துக்கள் பல. இவற்றில் முக்கியமானவற்றைக் குறிப்பிட வேண்டின் ஞான ரதம், குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம், கனக சுப்புரத்தினம் என்ற பாரதிதாஸன் என்று சொல்ல வேண்டும்.''

இங்கே பாரதியார் இன்று உலகிற்கு வைத்துவிட்டுப் போன முக்கியமான சொத்துக்களாக அவரது 'ஞான ரதம்', 'குயில் பாட்டு', 'பாஞ்சாலி சபதம்' என்ற முப்பெரும் படைப்புக்களைக் குறிப்பிட்டு விட்டு, முத்தாய்ப்பாகக் 'கனக சுப்புரத்தினம் என்ற பாரதிதாஸன்' என்று புதுமைப்பித்தன் சுட்டியிருப்பது அருமையிலும் அருமையான ஒன்றாகும். பாரதிதாசனை, அவரது அருமையை, பாரதியாருக்கும் பாரதிதாசனுக்கும் இடையே நிலவிய உணர்ச்சி ஒத்த உறவினை இதனினும் இரத்தினச் சுருக்கமாக வேறு யாரும் அடையாளம் காட்டிவிட முடியாது. இதே போல், 'மதிப்புரை' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில் புதுமைப்பித்தன், ''நல்ல இலக்கியமென்றால், எத்தனை நந்திகள் வழிமறித்துப் படுத்துக் கொண்டாலும் இவை உரிய ஸ்தானத்தை அடைந்தே தீரும்'' என 'நல்ல இலக்கியம்' என்பதற்குத் தந்திருக்கும் விளக்கம் திட்பமும் நுட்பமும் ததும்பி நிற்பதாகும்.

புதுமைப்பித்தனின் முத்திரைக் கதைகளுள் ஒன்று 'சாப விமோசனம்' அதில் உண்மை ஒளி சுடர்விட்டு நிற்கும் ஓர் இடம்:

''ரதத்தை விட்டு இறங்கிய ராமனது நெற்றியில் அனுபவம் வாய்க்கால் வெட்டியிருந்தது''.

புதுமைப்பித்தனின் கை வண்ணத்திற்குக் கட்டியம் கூறும் அற்புதமான வரி இது!

"வெள்ளிக்கிழமை மத்தியான்னம் வெயிலின் ஆதிக்கம், ஹிட்லரை நல்லவனாக்கியது"; "ஊர் அம்பலக்காரனின் மகள் பெண்களின் இலட்சியமாகவும் ஆண்களின் கனவாயும் இருந்தாள்"; "அங்கு தண்ணீர் எடுப்பது என்றால் ஒரு பாரதப் போர்!"; "அதற்கப்புறம் மூன்று வருஷங்கள், வெங்காயச் சருகு போல் உதிரிந்து விட்டன" – தமிழை அழகாக, அழுத்தமாக, ஆழமாக, இயல்பாக இன்னும் இது போல் எப்படியெல்லாம் கையாள முடியும் என்பதற்குப் புதுமைப்பித்தனின் இவ்வாக்கியங்கள் உயிருள்ள உதாரணங்கள் ஆகும்.

'விமரிசகர்களுக்கு எச்சரிக்கை!'

புதுமைப்பித்தனுக்கு இன்னொரு தனிச்சிறப்பும் உண்டு. தமிழ்ப் புனைகதை வரலாற்றில் நெஞ்சில் உரத்தோடும் நேர்மைத் திறத்தோடும் விமரிசகர்களுக்கு எச்சரிக்கை விடுத்த ஒரே எழுத்தாளர் புதுமைப்பித்தனே ஆவார். "வாழையடி வாழையாகப் பிறக்கும் வாசகர்களில் எவரோ ஒருவருக்கு நான் எழுதிக் கொண்டிருப்பதாகவே மதிக்கிறேன்" எனக் 'காஞ்சனை' என்னும் சிறுகதைத் தொகுதிக்கு 'எச்சரிக்கை' என்ற தலைப்பில் எழுதிய முன்னுரையில் வாக்குமூலம் தந்த புதுமைப்பித்தன், தொடர்ந்து விமரிசகர்களுக்கு முன்வைத்த எச்சரிக்கை முக்கியமானது. அது வருமாறு:

"விமரிசர்களுக்கு ஒரு வார்த்தை. வேதாந்திகள் கைக்குள் சிக்காத கடவுள் மாதிரிதான் நான் பிறப்பித்து விட்டவைகளும். அவை உங்கள் அளவுகோல்களுக்குள் அடைபடாதிருந்தால் நானும் பொறுப்பாளியல்ல; நான் பிறப்பித்து விளையாட விட்டுள்ள ஜீவராசிகளும் பொறுப்பாளியல்ல; உங்கள் அளவுகோல்களைத் தான் என் கதைகளில் அருகில் வைத்து அளந்து பார்த்துக் கொள்ளுகிறீர்கள் என்று உங்களுக்குச் சொல்லிவிட விரும்புகிறேன்".

இங்கே எத்துணைக் கூர்மையாக விமர்சகர்களையே விமர்சனம் செய்துள்ளார் புதுமைப்பித்தன் என்று பாருங்கள்! "நான் ஆண்டுக்கு ஆண்டு – நாளுக்கு நாள் – மாறிக் கொண்டிக்கிறேன்; வளர்ந்து கொண்டிருக்கிறேன். என்னை என்னுடைய அவ்வப்போதைய மாற்றங்களோடு – வளர்ச்சிகளோடு – அளக்கின்ற ஒரே மனிதர் என் தையல்காரர்தான்!" என்று ஓர் எழுத்தாளர் (பெர்னார்ட்ஷா என்று நினைவு) ஒரு படைப்பினுள் ஆழ்ந்திருக்கும் படைப்பாளியின் உள்ளத்தைத் தரிசிக்க இயலாத – அல்லது முயலாத – விமரிசர்களுக்குத் தந்துள்ள சாட்டையடி இங்கே ஒப்புநோக்கத்தக்கதாகும்.

குறைந்த வாழ்நாளில் நிறைந்த சாதனைகளை நிகழ்த்திக் காட்டிய புதுமைப்பித்தனைப் பற்றி இன்னும் எவ்வளவோ செய்திகளை 'எழுதிச் செல்லும் விதியின் கை போல எழுதி' மேற்செல்லலாம். என்றாலும், அவரது படைப்புத் திறத்தினை எவராலும் முழுமையாக வெளிப்படுத்திவிட முடியாது சொற்களில் வடித்து விட இயலாது.

"சொல்லில் வருவது பாதி – நெஞ்சில்

தூங்கிக் கிடப்பது மீதி"

என்னும் கவியரசு கண்ணதாசனின் வரிகளே எல்லோருடைய அனுபவமாகவும் இருக்கும்!

# 'இல்'லும் 'உள்'ளும்: ஒரு குறிப்பு

*பேராசிரியர் ந.சுப்ரமணியன்*

மக்கள் வாழும் கட்டிடத்திற்கு[1] வீடு என்பது பெரும்பாலும் பயன்படுத்தப் பெறும் சொல். இதற்கு இதே பொருளைத்தரும் பிற சொற்கள் இல், உள், அகம், மனை, நகர் என்பனவாம். இச்சொற்கள் பிறந்த வரலாற்றைச் சற்று விளக்கமாகக் காண்போம்

வடமொழியிலிலும் தமிழிலும் ஒரு மரபு உண்டு; அஃதியாதெனில் பொதுவாகவும் பெரும்பாலும் சொற்கள் அவற்றின் பொருளை நேரிடையாகக் குறிக்குமாறு ஆக்கப்படுதல் தான் வரன்முறை, ஆயினும் ஒவ்வோரமயங்களில், பொருள் ஒருபுறமிருக்க அதற்கு நேர் மாறான பொருள் குறிக்கும் பிறிதொரு சொல்லைப் பயன்படுத்தல் என்னும் உத்தியும் கையாளப் பெறும். எடுத்துக்காட்டாக அமங்கலமான செவ்வாய்க்கிழமையை மங்கள வாரம் எனலும் பாவிகளான அசுரரைப் புண்ய ஜனங்கள் எனலும் காண்க. 'கற்கரிக்கான்தட்டான்' என்பதும் அது. இதனை இலக்கண வழக்கு என்ப. அங்ஙனமே இல்லாததும் அழிதன் மாலையவற்றையும் உள்ளதாகவும் நிலைபேறுடையவாகவும் குறிக்கும் சொற்கள் உள. இதற்கு அழியக்கூடிய உடலை 'மெய்' என்றமை காண்க. எழுத்துக்களில் அழியக்கூடிய அதாவது பொய்யானவற்றை (தாமே இயங்க இயலாதவற்றை) உடல் என்றும், ஆதாரமாகத் தனித்து இயங்கக்கூடியவற்றை 'உயிர்' என்றும் கூற வந்தவர்கள் முந்தியதைப் பொய்யெழுத்துக்கள் எனாது 'மெய்யெழுத்துக்கள்' என்றனர்.

மேற்கூறியவற்றை நினைவிற்கொண்டு வீடு என்னும் சொல்லின் நேர்ச் சொற்கள் (பரியாயங்கள்) எவ்வாறு

ஆக்கப்பெற்றுள்ளன என்பதைக் காண்போம். இவற்றில் 'மனை' என்பதொன்று. இது 'மன்' என்னும் நிலைபேற்றினைக் குறிக்கும் பகுதியடியாகப் பிறந்து அழியக்கூடிய அல்லது முக்கியத்துவம் குறைந்த கட்டிடத்தைக் குறிப்பதாக ஆயிற்று[2]. இவ்வாறே வீட்டிற்குப் பரியாயமான 'உள்' என்னும் சொல்லில் இல்லாததை[3] உள்ளதாகக் கூறப்படும் பாங்கினையுணர்க.[4]

மக்கள் வாழும் வீட்டிற்கு 'இல்' என்பதும் ஒரு சொல். இச்சொல் இல்லாததை இல்லாததாகவே கூறி நேரிடைப் பொருண்மையை உணர்த்துவதாயிற்று. உள் இல் என்னும் இவ்விரு சொற்களிலும் மேற்கூறிய இரு உத்திகளையும் பயன்படுத்துதல் காணத்தக்கது.

மக்கள் குடியிருந்து வாழ்ந்து வருவதற்கு உதவும் வீடு என்பது ஒரு கட்டிடம். இது இல்வாழ்வோரைத் தன்னுள் அடக்கி அதற்கு ஓர் மேற் போர்வை போல் சூழ்ந்து நிற்பது. இவ்விரண்டிற்கும் இடையே உள்ள உறவுகளைச் சில உவமைகளாற் காண்போம்.

கூட்டிற்கும் அதில் உறையும் பறவைக்கும், மற்றும் முட்டையின் ஓட்டிற்கும் அதன் உள் இருக்கும் கருவிற்கும், அன்றியும் மக்கள் உடலுக்கும் அதில் தங்கும் உயிருக்கும் இடையே உள்ள உறவுகள் எல்லாம் இதற்கான சில உவமைகள். 'குடம்பைதனித் தொழியப் புட்பறந்தற்றே., உடம்போடுயிரிடை நட்பு' என்று இவ்உவமையை வள்ளுவரும் கூறினார். இதனால் 'எது இருந்து அழிவது' 'எது பறந்து போய்ப் பிறாண்டு வாழ்வது' என்பது சிறிது புலனாகும். அதனால்தான் வீட்டினை 'இல்' என்றனர். இச்சொல் வீட்டைக்குறிக்கும் எச்சொற்களிலும் சிறந்தது என்பதால் தான் இல்லறம், இல்வாழ்வான், இல்லாள் முதலியவற்றைக் குறளாசிரியர் பயன்படுத்தியுள்ளார் என்று தெளிக.

'அகம்' என்னும் சொல்லும் வீட்டைக்குறிக்கும்[6]. அகம், புறம் என்னும் பாகுபாடு தமிழ் இலக்கியத்திற்கு ஆதாரமானது. அகம் என்பது உள் என்பதன் ஓர் பரியாயச் சொல்லேயாகும். அகம் X புறம் என்பதற்கு நிகராக உள் வெளி என்பதைக் காண்க. ஈண்டு வெளியே சூழ்ந்து நிற்கும் கட்டுக்கோப்பினை அகம் என்றது என்னை? எனின், அதுவும் பொருளிற்கு மாறுபட்ட சொல்லை மேற்கொள்ளும் உத்தியிற் பிறந்த சொல்லாட்சியே என்க.[7]

மேற்கூறிய சொற்களில் 'அகம்' என்பது ஓர் இனத்தார் மட்டுமே பயன்படுத்தும் சொல்லில் அமைந்து விட்டது; அதே போல் 'உள்' என்னும் சொல் நாளடைவில் முழுவீட்டையும் குறிப்பதற்குப் பதிலாக வீட்டின் பகுதிகளான அறைகளைக் குறிக்கும் அளவிற்கு இன்று குன்றி நிற்பது காணப்பெறும். மற்றும் மனை என்பது பேரில்லங்களான 'அரண்மனை' போன்றவற்றைக் குறிக்கும் போது மட்டும் பயன்படுகின்றது என்பது தவிர, அச்சொல் பொது மக்களிடையே வீடு கட்டப்படும் இடத்தையே மிகுதியாகக் குறிக்கும் நிலைமையையும் எய்தியுள்ளது. இப்போது இச்சொல் இலக்கியத்தில் மட்டும் பெரும்பாலும் பயன் பெறுவதாயிற்று. ஆகவே, வீடு என்பதே மக்கள் இருந்து வாழும் கட்டிடத்தினைக் குறிக்கும், பெரும்பாலோரால் பயன்படுத்தப்படும் சொல்லாயிற்று.

மற்று, வீடு என்னும் சொல்லும் சிறிது ஆராய்ச்சிக்கு உரியதே. விடுபட்ட நிலை வீடு எனப்படும்.[8] அது துறவிகளுக்கு ஏற்றதும் உரியதும் ஆம்; ஆயினும் அஃது இல் வாழ்வோர் வாழிடத்தைக் குறிக்கும் எதிர்மறைச் சொல்லாட்சியின் பரிணாமங்களில் ஒன்றே என்பது காணலாம்.

இவ்வாறே நாம் நாள்தோறும் பயன்படுத்தும் பல எளிய சொற்களுக்கும் அவற்றின் பரிணாமத்தை ஆய்ந்து அறிந்து கொள்ளுதல் பயன்தரும் ஒரு இலக்கிய முயற்சியாகும்.

## *குறிப்புகள்*

1. மனை கட்டப்படும் இடம் கட்டிடம்

2. மன்னன் என்னும் சொல்லில் 'மன்' நிலைபேற்றினைக் குறிக்கும். 'மன்னாப் பொருளு மன்னவியற்றே' என்னும் தொல் காப்பியமும் காண்க. ஆங்கிலத்தில் மன்னராட்சி இடையீடின்றி நிலைபேறுடைத்து என்பதைக் குறிக்க The King is dead; long live the king என்னும் ஆட்சியும் காண்க.

3. இந்நிலையாமையைச் செல்வ நிலையாமையில் அடக்குக.

4. உள்: இது உண்மை என்னும் சொல்லின் பகுதி; நிலைபேறாக இருப்பதைக்குறிப்பது; இல்லாததற்கு மாறானது.

5. குறள் 338

6. இது இக்காலத்தே பெரும்பாலும் பிராம்மணர்களால் மட்டும் அப்பொருளில் பயன்படுத்தப்படுகின்றது.

7. இது வடமொழியில் ஒருவகை உபசார வழக்கு

8. வடமொழியில் மோட்சம் என்பதும் ஆங்கிலத்தில் release என்பதும் இதன் நேர்ச்சொற்கள்.

அன்பு அச்சகம், மதுரை-1. ✆ 741116